# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அரையாண்டுத் தேர்வு

## 2016 - 2017

## தமிழ்மொழி

## வளர் தமிழ் 5

சுட்டெண்:............................................................ நேரம்: 150 மணித்துளிகள்

www.tamiledc.com

## 1) பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

1. ஆடற்கலையை அந்நாளில் ______________________ என அழைத்தனர்.

( நடனம், கூத்து, நாட்டியம் )

2. ஒன்று சேர்ந்து சிங்கத்தைக் கொம்பினால் குத்திய விலங்குகள் ______________________ .

( மாடுகள், ஆடுகள், மான்கள் )

3. பொங்கலன்று ______________________ எழுந்து நீராடுவர்.

( பகலில், வைகறையில், மாலையில் )

4. தமிழினி சிற்பம் ______________________ .

( செதுக்கினாள், வரைந்தாள், வாசித்தாள் )

5. காடும் காடு சார்ந்த இடமும் ______________________ .

( குறிஞ்சி, மருதம், முல்லை )

6. **பழமொழி :-**

துறவிக்கு வேந்தன் ______________________ .

( இரும்பு, கரும்பு, துரும்பு )

7. குறிஞ்சி நிலத்திற்குரிய கலை ______________________ .

( குரவைக்கூத்து, பரதம், நடனம் )

8. தமிழர் வீரத்தோடு தொடர்புடைய மரம் ____________ .

( முதிரை, வாகை, பாலை )

9. ____________ விளையாட்டுப்போட்டியில் பங்குபற்றினர்.

( நாங்கள், நீங்கள், அவர்கள் )

10. ஆடற்குலப் பெண்களை ____________ என அழைப்பர்.

( விறலியர், பாணர், பாடினியர் )

11. மாமல்லன் என்று அழைக்கப்பட்ட மன்னன் ____________ .

( அருண்மொழித்தேவன், நரசிம்மபல்லவன், அதியர்மான் )

12. **விடுகதை :-**

எண்ணெய் இல்லை. திரியுமில்லை. ஏற்றி வைக்க ஆளுமில்லை. ஆனாலும் அணையாது வெளிச்சம் தரும். அது ____________ .

( விளக்கு, மெழுகுதிரி, கதிரவன் )

13. தைத்திருநாள் இல்லம் எல்லாம் ...... எனத் தொடங்கும் பாடலில் கூறப்படும் விழா ____________ .

( தைப்பொங்கல், நவராத்திரி, ஆடிப்பிறப்பு )

14. கலைகளிலே அவள் ஓவியம் எனப்பாடியவர் ____________ .

( பாவேந்தர், கண்ணதாசன், பாரதியார் )

15. செயற்கரிய செயல்களைச் செய்பவர் ______________ .

( சிறியர், பெரியர், கயவர் )

16. பேச்சு+போட்டி என்பதைச் சேர்த்து எழுதினால் ______________ .

( பேச்சுபோட்டி, பேச்சுப்போட்டி, பேசுபோட்டி )

17. உண்ண உணவு தருபவர் ______________ .

( புலவர், அறிஞர், உழவர் )

18. கணிகன் என்ற சொல் குறிப்பது ______________ .

( சோதிடனை, அரசனை, கவிஞனை )

19. ஆமை ______________ வாழும்.

( நீரில், நிலத்தில், நீரிலும்நிலத்திலும் )

20 அருண்மொழித்தேவன் ______________ மன்னன்.

( சோழ, பாண்டிய, சேர )

21. **திருக்குறள் :**

சுற்றத்தால் சுற்றப்பட வொழுகல் செல்வந்தான்

பெற்றத்தால் ______________ பயன்

( கற்ற, பெற்ற, மற்ற )

22. நேற்று நல்ல மழை ______________ .

( வீசியது, எறித்தது, பெய்தது )

23. தமிழில் பல சிறந்த அறநூல்கள் உள்ளன.

____________________ நல்லொழுக்கங்கள்பற்றிக் கூறுகின்றன.

( அது, அவை, அவற்றை )

24. ____________________ த் தொழிலுக்கு நிகரான தொழில் உலகில் ஏதும் இல்லையென ஔவையார் கூறுகின்றார்.

( உழவு, மருத்துவ, ஆசிரிய )

25. ____________________ சிங்கத்தைக் கண்டு விலங்குகள் ஓடின.

( கத்திய, பிளிறிய, முழங்கிய )

26. தன் பத்தொன்பதாவது அகவையில் விவிலிய நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் ____________________ .

( சின்னத்தம்பிப்புலவர், ஆறுமுகநாவலர், பரிமேலழகர் )

27. காலித்தல் என்றால் ____________________ .

( மறைதல், எழுதல், விழுதல் )

28. ____________________ நட்பு பழகப்பழக மனதுக்கு இன்பம் தரும்.

( தீயோரது, நல்லோரது, சிறியோரது )

29. கணிகன் கூறியதுபோல் தமிழர்களுடைய உள்ளங்களில் இன்றும் பேரரசனாக விளங்குபவர் ____________________ .

( நெடுஞ்சேரலாதன், செங்குட்டுவன், இளங்கோவடிகள் )

30. சிறுவர் ____________________ ப் பாவை செய்து விளையாடினர்.

( பனி, பநி, பணி )

புள்ளிகள் 30

## 2) கீறிட்ட இடத்தில் மிகப்பொருத்தமான சொல்லை எழுதுக.

| | | | | |
|---|---|---|---|---|
| கலகல | படபட | கமகம | மடமட | மளமள |

1. அம்மா கொய்த மல்லிகைப்பூ ________________ என மணம் வீசியது.

2. பள்ளியில் ஆசிரியர் கூறிய நகச்சுவையைக் கேட்ட மாணவி ________________ எனச் சிரித்தாள்.

3. கடும் வெய்யிலில் நடந்து களைத்த முதியவர் நீரை ________________ எனப் பருகினார்.

4. வெடிச்சத்தத்தைக் கேட்ட சிறுமியின் நெஞ்சு ________________ என அடித்தது.

5. காவியன் தனது வீட்டுப்பாடத்தை ________________ எனச் செய்து முடித்தான்.

புள்ளிகள் 10

## 3) பாடநூல் வினா ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.

1. நகுதற் பொருட்டன்று நட்பு எனக் கூறிய புலவர் யார்?

___

___

2. பொன்னை உருக்கி வண்ண அணிகலன்களைச் செய்பவரை எவ்வாறு அழைப்பர்?

___

3. கதிரவனுக்குப் பொங்கலோடு எவற்றைச் சேர்த்துப் படைப்பர்?

___

___

4. அண்ணன் சொற்படி தம்பி நடப்பது எங்களது குடிமானம் எனக்கூறியவர் யார்?

___

___

5. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என்ற பழமொழி விளக்குவது எதை?

___

___

6. பல்லவ மன்னர்களால் வரையப்பட்ட சிறந்த ஓவியங்கள் எங்கே காணப்படுகின்றன?

___

___

7. கூலங்கள் இரண்டின் பெயர்களைத் தருக.

___

___

புள்ளிகள் 10

4) **கீறிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை வைத்து கவிதையை நிரப்புக.**

| அன்பை | பாடும் | வைத்த |
|---|---|---|
| ஔவை | தந்த | |

*பாட்டி ______________ ப் பாட்டி*
*பாட்டுச் சொன்ன பாட்டி*
*பாட்டில் ______________ ஊட்டிப்*
*பாடச் செய்த பாட்டி*

*ஆத்தி சூடிப் பாட்டை*
*ஆக்கித்______________ பாட்டி*
*நேர்த்தியான பாட்டை*
*நிலைக்க ______________ பாட்டி*

*கொன்றை வேந்தன் பாட்டை*
*கோத்துத் தந்த பாட்டி*
*என்றும் ______________ பாட்டை*
*எழுதி வைத்த பாட்டி*

புள்ளிகள் 10

5) **மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.**

| | | |
|---|---|---|
| முட்டையும் | வளர்ச்சிக்கும் | விற்கும் |
| காய்கறிகளில் | உணவுகளை | |

நாம் உயிர் வாழ்வதற்கு உணவு இன்றியமையாதது. உடல் ________________ உடல் நலத்திற்கும் உணவு தேவை. நாம் நோயின்றி வாழச் சத்துள்ள ________________ உண்ண வேண்டும். நாம் உண்ணும் உணவுகளுடன் பழங்களையும் கீரைவகைகளையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். பச்சைக் ________________ இருந்து உடலுக்குத் தேவையான உயிர்ச்சத்துகள் கிடைக்கின்றன. வெளியே தெருக்களில் ________________ உணவுகளை வாங்கி நாம் உண்ணக் கூடாது. அதனால் எமக்கு நோய்கள் ஏற்படும். வீட்டில் சமைத்த உணவுகளையே நாம் விரும்பி உண்ண வேண்டும். பாலும் ________________ சத்துள்ள சிறந்த உணவுகளாகும்.

புள்ளிகள் 10

**6) பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுவிடை தருக.**

இலங்கையில் செழிப்பாக வளரும் மரங்களில் ஒன்று தென்னை. இது மிகவும் உயரமாக வளரும். தென்னையின் இலையைத் தென்னோலை என அழைப்பர். தென்னோலையில் கிடுகு பின்னுவர். கிடுகு வேலி அடைப்பதற்கும் வீடு வேய்வதற்கும் பயன்படுகிறது. தென்னையிலிருந்து இளநீரும் தேங்காயும் பெறப்படுகின்றன. இளநீர் குடிப்பதற்குச் சுவையாக இருக்கும். தேங்காயிலிருந்து தேங்காய் எண்ணெய் கிடைக்கிறது. தென்னை மன்னார், யாழ்ப்பாணம், திருகோணமலை போன்ற பல இடங்களில் அதிகமாகக் காணப்படுகிறது. இது மிகவும் பயனுள்ள மரமாகும். தென்னையைத் தெங்கு என்றும் கூறுவர்.

1. இலங்கையில் செழிப்பாக வளரும் மரம் எது?

   ________________________________________

2. தென்னையின் இலையை எவ்வாறு அழைப்பர்?

   ________________________________________

3. எவற்றிக்குக் கிடுகு பயன் படுகின்றது?

   ________________________________________

   ________________________________________

4. தென்னையிலிருந்து எவை பெறப்படுகின்றன?

   ________________________________________

   ________________________________________

5. தென்னையை வேறு எப்படிக் கூறுவர்?

   ________________________________________

புள்ளிகள் 10

7) **பந்தியை வாழிட மொழியில் மாற்றி எழுதுக.**

தமிழரின் தாய் நிலங்களில் ஒன்று தமிழீழம். அவர்களின் தாய் மொழி தமிழ். இன்று உலகெங்கும் தமிழர் வாழ்கின்றனர். அவர்கள் வாழும் நாடுகளில் தமிழ்ப் பள்ளிகள் இருக்கின்றன. அங்கு தமிழ்ப் பிள்ளைகள் தமிழ் படிக்கின்றனர். நானும் தமிழ் படிக்கின்றேன். அது எனக்கு மகிழ்ச்சியாக இருக்கின்றது.

புள்ளிகள் 05

8) **தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 60 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- தமிழர் கலைத்திறனில் ஆடற்கலைபற்றிக் கூறியுள்ளவற்றை எழுதுக.
- ஒன்று பட்டால் உண்டு வாழ்வு என்ற கதையைச் சுருக்கமாக எழுதுக.
- பள்ளி ஆண்டுவிழா.

புள்ளிகள் 15